பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 20 செவ்வாய்க்கிழமை (05-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 241

# ஓமந்தையில் படை நிலைகள் மீது புலிகள் தொடர்ந்து கடும் ஷெல் வீச்சு!

## கிபிர் விமானம் மற்றும் ஹெலிகள் பதில் தாக்கு

வவுனியா, ஓகஸ்ட் 5

ஓமந்தைப் பகுதியில் வெள்ளி இரவு பெரும் தாக்குதல் நடத்திய புலிகள் ஓமந்தையில் படையினர் நிலைகள் மீது தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஞாயிறு இரவு 30க்கும் மேற்பட்ட ஷெல்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து ஓமந்தையில் படையினரின் நிலைகள் மீது ஏவப்பட்டன.

புலிகளின் ஷெல் வீச்சினால் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

நேற்றுக் காலை படையினர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பதில் தாக்குதல் நடத்திய தாக ஞாயிறு இரவு இடம்பெற்ற புலிகளின் ஷெல் தாக்குதலின் போது படையினருக்கு சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று வவுனியா ''திவயின'' 

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ வெளியேறாது

கொழும்பு, ஓக. 5

ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறமாட்டாது.

இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளதாக ரெலோ அமைப்பின் செயலதிபர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்:

''துண்டிக்கப்படாத நிலையில் வடக்கு—கிழக்கு இணைப்புத் தொடரவேண்டும் என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

''எமது நிலைப்பாட்டுக்காக கூட்டமைப்புக்குள் தொடர்ந்து இருந்தவாறே போராடப்போகிறோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-21)

## நவீன ஆயுதங்களை மீட்டதாக விடுதலைப் புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஓக. 5

ஓமந்தைப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் மீது கடந்த வெள்ளியன்று நடத்திய பாரிய தாக்குதலில் விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகள், டாங்கி எதிர்ப்புக் கிரனேட் செலுத்திகள் உட்படப் பல நவீன ரக ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்:

இத் தாக்குதல் தொடர்பான நீண்ட அறிக்கை ஒன்றைப் 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு வெளியிட்டது.

ஓமந்தை, ரம்பைக் குளம் பகுதிகளில் அமைந்திருந்த காவலரண்கள் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 135 படையினர் பலியானதாகவும், 400க்கு மேற்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் .39 சடலங்கள் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஓக. 5

ஓமந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் 39 பேரின் சடலங்களைப் படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடம் ஒப்படைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்ட இச்சடலங்கள் பின்னர் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டனவா என்ற தகவலை நேற்றிரவு வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(ஐ-3-164)

## புலிகள் எனக்கருதி பொலீஸார் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம்!

### இருவர் அதே இடத்தில் பலி; நால்வரைக் காணவில்லை

கொழும்பு, ஓக. 5

கடந்த வெள்ளி இரவு ஓமந்தைப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலின்போது காட்டுக்குள் தப்பி ஓடிய பொலீஸாரில் இருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். புலிகள் என நினைத்தே சுட்டதாக படையினர் தெரிவிக்கின்றனர்

இது குறித்து வவுனியா ''திவயின'' செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே நேற்று பி. பி. ஸியின் சிங்களச் சேவைக்குத் தெரிவித்ததாவது:-

புலிகள் வெள்ளி இரவு மேற்கொண்ட தாக்குதலையடுத்து பெருமளவு எண்ணிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகம்

அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர் திருத்தக் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திக்கம் காவலரண் மீது அதிகாலை தாக்குதல்!

கொழும்பு, ஓக. 5

பருத்தித்துறை திக்கம் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை 3.45 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனையடுத்து அப்பகுதியில் இருதரப்பினரிடையேயும் நீண்டநேரம் மோதல் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் பலியானதாகவும் அவர்களிடமிருந்து ரீ-56 ரகத் துப்பாக்கிகள் மூன்று கைப்பற்றப்பட்டதாகவும் தாக்குதலில் ஈடுபட்ட நான்கு படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

மோதல் ஆரம்பித்ததும் பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதியில் இருந்து ஷெல்கள் ஏவப்பட்டன.

(ஐ-3-15)

## ஆலயத்துக்குள்வைத்து பூசகர் சுட்டுக் கொலை

### மட்டு. ஆரையம்பதியில் சம்பவம்

கொழும்பு, ஓக. 5

மட்டக்களப்பு ஆரையம்பதி பேச்சியம்மன் கோயில் பூசகரான பூபாலபிள்ளை பாஸ்கரன் (வயது 35) என்பவர் நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தை ஒட்டிய பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் அவரைச் சுட்டுக் கொன்றார்.

அந்த நபரைக் கண்டதும் பூசகர் மூலஸ்தானத்துக்குள் ஓடி ஒளிக்க முயன்றார் என்றும் —

அச்சமயம் அவர் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுறது.

அக்கரைப்பற்று வாசியான இவர் முன்னர் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினராக இருந்தார் என்று சொல்லப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தீர்வுத்திட்டத்துக்கு ஆதரவு தேட

## ஒக்ரோபர் நடுப்பகுதியில் சர்வஜன வாக்கெடுப்பு!

கொழும்பு, ஓக. 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்வைத்துள்ள உத்தேச அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக மக்களின் கருத்தை அறிந்து கொள்ள சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நடத்த அரசு உத்தேசித்துள்ளது.

இந்த வாக்கெடுப்புக்கு ஆதரவு தேடும் நோக்கில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த ஜனவரியில் வடக்கு வானில்

## காணாமற்போன விமானத்தின் விமானிகள் புலிகளிடம் சிக்கினரா?

### விசாரணை நடத்த விமானப்படைத் தளபதி உத்தரவு

கொழும்பு, ஓக. 5

பலாலிக்கு வடக்கே 20 மைல் தொலைவில் பறந்து கொண்டிருந்த சமயம் கடந்த ஜனவரி 19 ஆம் திகதி திடீரெனக் காணாமற் போன இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான வை-12 ரக விமானத்தின் விமானமோட்டியான சுதர்சன தில்குக் நாணயக்காராவும் அவரது உதவியாளரான ... சிக்கியுள்ளனர் எனக்கிடைத்த பல தகவல்கள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினரால் விமானப்படைத் தளபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விமானத்தின் பணியாட்களின் கதிபற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் தகவல் குறித்து அதிக கவனம் செலுத்தி விமானிகள் இருவரும் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டறிந்து தெரிவிக்குமாறு விமானப் படைத் தளபதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சந்நிதியான் ஆச்சிரமம்

## உயர்திரு. மயில்வாகனம் சுவாமி

அவர்களின் குருபூசைத் தினப்போட்டி வரும் 07-08-97 வியாழக்கிழமை நடைபெற உள்ளது. விண்ணப்பம் செய்த மாணவர்கள் தவறாது பங்கு பற்றவும்.

குருபணியில்
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்

(48807)

---

பரமகுரு முதலியப் பெருமான்
தேவஸ்தானம்
வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.

## இறுதி அறிவித்தல்

கடந்த 10 - 07 - 1997 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட இலாப சீட்டிழுப்பில் பரிசு பெற்றுக் கொள்ளாதவர்கள் 12-08-97 க்குள் பெற்றுக் கொள்ளவும்.

பரிசு பெற்ற முடிவு:
1 ஆம் பரிசு:- இல. 460
ஆறுதல் பரிசு இல. 471, 962, 517, 1590, 767.

- ஆலயபரிபாலன சபை

(48804)

---

கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவிலக்கம்: ஜே 1572 பதிவு திகதி: 01-03-72

## வெள்ளி விழா

எமது சங்கத்தின் வெள்ளிவிழா இன்று (5-8-97) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு தாவடியில் உள்ள சங்கப் படிப்பக மண்டபத்தில், சங்கத் தலைவர் திரு: வ. இரத்தினசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்குப் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம் பொருள் - யாழ்ப்பாணம்) அவர்கள் கலந்து கொள்வதுடன், 25 வருடங்கள் சேவையாற்றிய அங்கத்தவர்கள், பணியாளர்களைக் கௌரவித்துச் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கவுள்ளார்.

வெள்ளிவிழாக் காணும் அங்கத்தவர்களையும், பணியாளர்களையும் வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

கே.கே.எஸ். வீதி,
தாவடி.

(சி/1263)

---

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி டச்வீதி ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும் ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவருமான

### திருவாளர் சின்னப்பு கனகரத்தினம்
(கனகராசா)

அவர்கள் சென்ற 03-08-97 இல் மரணமடைந்ததையிட்டுப் பெருந் துயருறுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபை
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூ. சங்கம்.

(சி/1262)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வங்கி ஊழியர்
திருமதி சுரேந்திரன் நித்தியலட்சுமியின்
அன்புக் கணவர்

### சோமசுந்தரம் சுரேந்திரன்
[ மக்கள் வங்கி வவுனியா ]

அவர்களின் திடீர் மறைவைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையுமடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதான முகாமையாளரும்,
ஊழியர்களும்.

இலங்கை வங்கி,
மேற்றரக் கிளை,
யாழ்ப்பாணம்.

[48808]

---

## குக்கர் எரிந்து இருவர் படுகாயம்

சமையல் செய்வதற்காக மண்எண்ணெய்க் குக்கரைப் பற்றவைத்த வேளை திடீரென அது தீப்பற்றி எரிந்ததில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர்.

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீரகத்தி சத்தியசீலன் (வயது 51), அவரது மனைவி சத்தியசீலன் யோகேஸ்வரி (வயது 49) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

கணவனின் உடலில் தீபற்றியதும் பீதியால் அவரைக் கட்டிப் பிடித்ததாலேயே மனைவியும் காயமடைய நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## துன்னாலைவாசி ஜேர்மனில் பலி!

ஜேர்மனியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற ரயில் விபத்துச் சம்பவம் ஒன்றில் துன்னாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்பலியானதாகத் தெரிய வருகிறது.

துன்னாலை இந்திர அம்மன் கோயிலடியைச் சேர்ந்த செல்லையா பிரதாபன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் கடந்த 5 ஆண்டு காலமாக ஜேர்மனியில் வசித்து வந்தார். (ஐ-15)

## விசேட அ. அட்டைகள் விநியோகம்

ஈச்சமோட்டை (ஜே/66) கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஓ. 5

ஊரெழு ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சைவாலய முன்னேற்றக் கழகத்தினால் நடத்தப்பட்ட சமய பொது அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணஐயர் கலந்து கொள்கிறார். (இ-4)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெற்றிடங்கள் (விஞ்ஞானபீடம்)

மேற்படி விடயம் தொடர்பாக 1997-08-03 ஆம் திகதிப் பத்திரிகையில் வெளியான விளம்பரத்திற்கு மேலதிகமாக விரிவுரையாளர் (தகுதிகாண்) / கணனி விஞ்ஞானத்துறை பதவிக்கான விண்ணப்பங்களும் 1997-09-30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்
1997-08-04

(சி/1264)

---

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பீற்றர் தேவபாலசிங்கம்

முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளரும், சுண்டுக்குளியில் வசித்து வந்தவருமாகிய செல்லையா பீற்றர் தேவபாலசிங்கம் 1-8-97 இல் மறுமைக்குள் பிரவேசித்தார்.

இவர் வடகோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி வி. கே. செல்லையா தம்பதிகளின் புதல்வரும் பொலின் சுகிர்தத்தின் (சுகி) அன்புக் கணவரும், ஏஞ்சலா (கொழும்பு), கிறிஸ்ரெலா (இந்தியா), இவஞ்சலா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 5-08-97 இன்று மாலை 3-00 மணிக்கு (S. L. T.) நடைபெற்று கொட்டடியிலுள்ள மெதடிஸ்த சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
மனைவி
(சுகி)

இல.21, சோமசுந்தரம் அவன்யூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(48816)

---

## ஆறுமுகம் நாராயணர்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாராயணர் 04-08-1997 அன்று காலமானார்.

இவர் அன்னபூர்ணத்தின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம், ஜெயபாலசிங்கம், உதயசிங்கம், ஜெயராணி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-8-97) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தர்மகுலசிங்கம்
(மகன்)

கோப்பாய் தெற்கு,
இருபாலை.

(48813)

---

## சுவாமிநாதன் நீலாயதாட்சனியம்மா
(நல்லம்மா)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் நீலாயதாட்சனியம்மா (நல்லம்மா) அவர்கள் 4-08-1997 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதன்—சுந்தரவல்லி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சுவாமிநாதனின் மனைவியும், காலஞ்சென்ற சி. தியாகராசா (C T.B றைவர், காரைநகர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 5-08-97 செவ்வாய்க்கிழமை 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. வைத்தீஸ்வரன்
(மருமகன்)

இருபாலை.

(சி/1265)

---

## சின்னத்தம்பி சின்னையா
[ஆசாரி]

வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி சின்னையா (ஆசாரி) 04 - 08 - 97 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பூரணம் அவர்களின் அன்புக் கணவரும், பாலசிங்கம் (காபிரேற்றர் ஆனந்தன்), பஞ்சாட்சரம் (டென்மார்க்), திருமதி ராஜேஸ்வரி, திருமதி கமலாதேவி, திருமதி சத்தியபாமா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு (யூனியர்), துரைசிங்கம், விவேகானந்தா (லிபியா), லீலாவதி, ஜெயசாந்தினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயானந்தன் (சுவிஸ்), ஜெயந்தி, ஜெயசுதா, ஜெசிந்தா, நிராஜ், ஜெறீனா (டென்மார்க்), காலஞ்சென்ற ரஞ்சன், (ஜேர்மனி), திருமதி ஜெ. தர்மினி, சயந்தன், துஸ்யந்தன், துஸ்யந்தி, வேணுஜா, தேனுகா, டசிக்கா (இந்தியா) ஆகியோரின் பேரனும், விஜாசன், அமிர்தயன், அதிஸ்ரா ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற ஐயாத்துரை, காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற பொன்னம்மா தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05 - 08 - 97) செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு 125, சிவப்பிரகாசம் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. பாலசிங்கம் (மகன்)
(ஆனந்தன் காபிரேற்றர்)
யாழ்ப்பாணம்.

125, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(48812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் கொமாண்டோக்கள் தென் லெபனானில் தாக்குதல்!

பேரூட் ஓக, 5

கடந்த புதன்கிழமை ஜெரூஸலத்தில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து இஸ்ரேல் கொமாண்டோக்கள் தன்லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர்.

தென் லெபனானில் இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள பகுதிக்கு வெளியே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பீரங்கிகள் பொருத்தப்பட்ட இஸ்ரேல் ஹெலிகள் இத்தாக்குதலில் பெரும் அளவில் பங்கு கொண்டன என்றும்—

தாக்குதலின் போது 5 கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஜெரூஸலத்தில் தெரிவிக்கப்பட்டது

லெபனான் எல்லைக்குள் இருந்து பலஸ்தீன கெரில்லாக்கள் இஸ்ரேலுக்குள் அடிக்கடி ரொக்கட்தாக்குதல்களை நடத்தியதைஅடுத்து 1982ஆம் ஆண்டு இஸ்ரேல் துருப்புக்கள், தென்லெபனானில்கெரில்லாத்தாக்குதலுக்குதீவிரவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றின. இஸ்ரேல் தொடர்ந்து இன்றும் அப்பகுதியில் நிலை கொண்டுள்ளது'

இதற்கிடையில் ஜெரூஸலத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து கேள்விக்குறியாகிவிட்ட மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை மீண்டும் தொடர்வதற்கான முயற்சிகளில் ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் ஈடுபட்டுள்ளார்.

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தை இவர் நேற்றுச் சந்தித்தார்.

இதே சமயம் கடந்த புதன்கிழமை ஜெரூஸலேமில் நடைபெற்ற இரண்டுதற்கொலை குண்டு தாக்குதல்களுக்கும் ஹமாஸ் பொறுப்பு என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

4 நாள்களாக நடத்திய தீவிர புலனாய்வு நடவடிக்கைகளுக்குப் பின்னரும், துப்புத் துலக்கும் தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை என இஸ்ரேலின் பொலீஸ்துறைத் தலைவர் இராணுவ வானொலியில் தெரிவித்தார்.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய 25 வயது மதிக்கத் தக்க - பலஸ்தீனர் என நம்பப்படுகின்ற - குண்டுதாரி பலஸ்தீன நிலப்பரப்புக்குள் இருந்து வந்தவரா? அல்லது வெளியில் இருந்து வந்தவரா? என்பதுஇன்னும் தெளிவாகவில்லை.

'ஹமாஸ் என்ற தீவிரவாத இயக்கத்தினரின் கையொப்பமிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றுஇத்தாக்குதல்களுக்கு உரிமை கோரியிருந்தது.

ஆனால் அந்தத் துண்டுப் பிரசுரம் ஹமாஸினால் வெளியிடப்பட்டது. ஒன்றா? இல்லையா? என்பதையிட்டு பலஸ்தீன அதிகாரிகளும் இஸ்ரேல் அதிகாரிகளும் சந்தேகங் கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணிக்குள் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் ஹமாஸ் இயக்கத்தினர் விடுவிக்கப்படாவிட்டால் தாக்குதல்கள் மேலும் தொடருமென்று அந்தத் துண்டுப் பிரசுரம் இஸ்ரேல் அரசாங்கத்துக்கு காலக்கெடு விதித்திருந்தது. (இ - 3)

## எழுத்தாளருக்கு ரகசிய தகவல்கள்


கடந்த மாதம் சீனாவுடன் மீண்டும் இணைந்துவிட்ட முன்னாள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடான ஹொங்கொங்கில் கடைசியாக பிரிட்டிஷ் ஆளுநராக இருந்த கிறிஸ்பேட்டன் தயது பதவிக்காலத்தில் நடந்த சில இரகசியத் தகவல்களை ஒரு புத்தக எழுத்தாளருக்கு தெரிவித்து விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஜோனதன் டிம்பில் போய் என்ற அந்த எழுத்தாளர் தனது ''கடைசி ஆளுநர்'' என்ற புத்தகத்தில் கிறிஸ்பேட்டன் கொடுத்திருந்த இரகசியத்தகவல்களை பயன்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது.

ஹொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைப்பது தொடர்பாக முன்னாள் வெளியுறவு செயலர், ஹொங்கொங்கின் முன்னாள் ஆளுநர், திருமதி தட்சரின் முன்னாள் ஆலோசகர்கள் சீனாவுக்கு உடந்தையாக இருந்தனர் என்று கிறிஸ்பேட்டன் தெரிவித்ததாக அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது. (இ-3)

## ஊழல் அரசியல்வாதிகள் சிறையில் அடைக்கப்படுவர்

### பிரதமர் குஜ்ரால் எச்சரிக்கை



புதுடில்லி, ஓக 5

''ஊழல் புரியும் அரசியல் வாதிகள் சிறையில் அடைக்கப் படுவார்கள்'' என்று இந்தியப்பிரதமர் இந்தர்குமார் குஜரால் எச்சரித்துள்ளார்.

அவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும், முதலமைச்சர்களாகஇருந்தாலும் அல்லது அரசில் எத்தகைய உயர் பதவி வகித்தாலும் அகற்றப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

வட-இந்திய பரிதாப் பைசல் மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் வைத்து இந்த எச்சரிக்கையை பிரதமர் விடுத்துள்ளார்.

''ஊழல் தான் நாட்டின் பெரிய எதிரி, அதுஉள்ளிருந்தே கொல்லும் வியாதி'' என்றும் அவர் கூறினார், (இ 3)

## அல்ஜீரியா நாட்டில் படுகொலைகள் நீடிப்பு

### மேலும் 100 சடலங்கள் மீட்பு

அல்ஜியர்ஸ், ஓக. 5

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜிரியர்ஸுக்கு தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் மேலும் 100 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 38 பேர் அல்ஜியர்ஸின் தென்பகுதி கிராமம் ஒன்றில் சுட்டும், கழுத்து நெரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.

மேற்கு மாகாணமான ஹெயின் டெப்லாவில் நடந்த மற்றொரு தாக்குதலில் 46 கிராமவாசிகள் பலியாகினர்.

'மரண முக்கோணம்' என்று அல்ஜீரிய மக்களால் அழைக்கப்படும் பகுதியில் ஸார்பா என்னுமிடத்தில் மேலும் 20 பேர் கொல்லப்பட்டனர்.

ஜீ. ஐ. ஏ எனப்படும் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவினராலேயே இப்படுகொலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்தத் தீவிரவாதக் குழுவுக்கு எதிராக அல்ஜீரிய அரசு அண்மையில் பெரிய அளவிலான எதிர்த்தாக்குதல் ஒன்றை நடத்தியது. இத்தாக்குதலின் போது ஜீ. ஐ. ஏ தீவிரவாதக் குழுவின் தலைவரைக் கொன்று விட்டதாக வெளியான தகவல்களை ஜீ. ஐ. ஏ மறுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து நடைபெற்ற படுகொலைகளில் 500-க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். (ஐ)

## அல்பேனியாவில் இத்தாலியப் படைகள்

திரானா, ஓக. 5

அல்பேனியாவின் தலைநகரான திரானாவில் ஆயிரம் இத்தாலியப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் அல்பேனியாவின் புதிய சோஷலிச அரசாங்கத்துக்கும் இத்தாலிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இராணுவ ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்க இத்தாலியப் படைகள் அல்பேனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அல்பேனியாவின் இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளை புனரமைக்கும் வேலையிலும் இத்தாலியப் படைகள் ஈடுபடும். (இ)

## இந்திய - சீன உயர் அதிகாரிகள் எல்லைத் தகராறு குறித்துப் பேச்சு

புதுடில்லி, ஓக. 5

இந்திய — சீன எல்லைப் பேச்சுக்கள் நேற்று புதுடில்லியில் மீண்டும் ஆரம்பமாகின.

கூட்டு அலுவல் குழுவின் இரு நாள் கூட்டத்தில் பிரச்சினையின் பல்வேறு விடயங்கள் ஆராயப்படும்.

இந்திய தரப்புக்கு வெளியுறவுச் செயலர் பி. ரகுநாத்தும் சீனத் தரப்புக்கு துணை வெளிவிவகார அமைச்சர் டான் ஹியாது வானும் தலைமை வகிக்கின்றனர்.

இந்தியாவும் சீனாவும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக 1962 ஆம் ஆண்டு சண்டையில் ஈடுபட்டன.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்வு காணப்படாத நிலையில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## காபூலுக்கு வடக்கே கடும்சண்டை

காபூல், ஓக. 5

ஆப்கானிஸ்தான்தலைநகர் காபூலுக்கு வடக்கேயுள்ள சமதரைப்பகுதிகளில் தலிபான் படைகளுக்கும் முக்கிய எதிராளிகளான அகமது ஷாவின் படைகளுக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

காபூல் நகரம் உட்பட ஆப்கானிஸ்தானில் மூன்றில் இரண்டு பகுதிகள் தலிபாவின் கட்டுப்பாட்டிலிருந்தன. ஆனால் எதிரணிப்படைகள் அண்மையில் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கைகள் அவர்களைத் தலைநகரிலிருந்து 20 கிலோ மீற்றர் வரை கொண்டுவந்துவிட்டன (இ-5)

## இனவாத தலைவர்களே கொலைக்குக் காரணம்

### மண்டேலா குற்றச்சாட்டு

ஜோகன்ஸ்பேர்க், ஓக. 5

ஆபிரிக்க தேசிய காங்கிரசைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டதற்கு முன்னர் பதவியில் இருந்த இனவாத அரசுத் தலைவர்களே காரணம் என்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா குற்றஞ்சாட்டி உள்ளார்.

தமது ஆட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்த இவர்கள் முயல்வதாக மண்டேலா கூறினார். (இ)

## கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த 4 பெண்கள் இந்தியாவில் கைது!

புதுடில்லி, ஓக. 5

மத்திய இந்தியாவில் போகா நகர்ப்புறத்தில் பல கொள்ளைகளை நடத்திக் கொண்டு கடந்த 15 வருடங்களாக காவல் துறையின் வலையில் இருந்து தப்பியிருந்த கொள்ளைக் கும்பல் ஒன்றின் 4பேரை காவல் துறை கைது செய்துள்ளது.

இக்கொள்ளைக் கும்பலில் இருப்பவர்கள் அனைவரும் பெண்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது. (இ-3)

## உலக அரங்கில்

### ரயிலில் குண்டு வெடிப்பு

சென்னை, ஓக. 5

பெங்களூர் நோக்கி வந்து கொண்டிருந்த மதுரை கடுகதி ரயிலில் நாட்டு வெடி குண்டு வெடித்ததில் 16 பேர் காயமடைந்தனர்.

பெங்களூரில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் மாலூர் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் கோலார் தங்கவயல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

### மத்திய அமைச்சர் விபத்தில் காயம்

புதுடில்லி, ஓகஸ்ட் 5

ஹரியானாவில் கிவாடி மாவட்டம் கன்னியா ரயில் நிலையம் அருகே விரைவு ரயில் நேற்று அதிகாலை தடம் புரண்டதில் மத்திய அமைச்சர் சிசிராம் போலா காயமடைந்தார்.

மொத்தம் 11 பெட்டிகள் தடம்புரண்டன. இதில் 12 பேர் காயமடைந்தனர். (இ-3)

## ஈரானின் புதிய அதிபராக ஹத்தாமி பதவி ஏற்றார்

ஈரானின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள முஹமட் ஹத்தாமிக்கு ஈரானிய ஆன்மீகத் தலைவரும் அந்நாட்டின் மிகவும் உயர்நிலைத் தலைவர் என்று கூறப்படுபவருமான அயொதுல்லா அலிகொமேய்னி அதிகார பூர்வமான ஆசிகளை வழங்கியுள்ளார்.

இதற்காக நடைபெற்ற வைபவத்தில் 7 ராஜீய தூதுவர்களும் மூத்த ஈரானிய அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாற்றம் வேண்டும் என்ற மக்களின் ஆணை ஹத்தாமியின் முன் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசியல் கட்சிகள் தொடங்குவதற்கு அனுமதிக்கப்போவதாகவும், பெண்களுக்கு பொதுவாழ்வில் அதிகரித்த பங்களிப்பை வழங்கப் போவதாகவும், ஈரானில் விரக்தியடைந்த இளைஞர்களுக்கு மேலும் வாய்ப்புக்கள் அளிக்கப்போவதாகவும் புதிய அதிபர் உறுதியளித்துள்ளார். ஆனால், தனது மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் மிகப் பெரிய தடைகளுக்கு ஹத்தாமி முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்று கூறப்படுகின்றது. (இ-5)

### தப்பினார்

பிரபல கொலைகாரன் சார்ல்ஸ் சோப்ராஜின் ஜேர்மன் நாட்டுக் காதலி ஜெக்குவின் குஸ்டர் இந்தியாவில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த சார்ல்ஸ் சோப்ராஜ் 1970 ஆம் ஆண்டுகளில் ஆசிய நாடுகளில் 20-க்கும் அதிகமான உல்லாசப் பயணிகளை மர்மமான முறையில் கொலை செய்த குற்றத்தின் பேரில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு அண்மையில் பிரான்ஸுக்கு நாடுகடத்தப்பட்டது தெரிந்ததே. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

இறைபதமடைந்த
பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னை நாள்
விவசாய விரிவுரையாளர்

**திரு. C. P. தேவபாலசிங்கம் B.Sc., Dip. Ed.**

அவர்களின்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், விரிவுரையாளர் குழுமத்தினர்,
ஆசிரிய மாணவர்கள், பணியாளர்கள்.

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (48801)

# பதவிகள் வெற்றிடம்

## 1. பதவி: பிரதம குரு (ஒன்று)

தகைமைகள்:

கோயில் கும்பாபிஷேகம் உட்பட சகல சமயக் கிரியைகளையும் தானே செய்யக்கூடியவராகவும், 45 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்லொழுக்கம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

## 2. பதவி: அர்ச்சகர்கள் (மூன்று)

தகைமைகள்:

கோயில் நித்திய பூசைகளை தானே செய்யக்கூடியவராகவும், பண்பான குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

## 3. பதவி: கோயில் உதவியாளர் (ஒன்று)

தகைமைகள்:

கோயில் பராமரிப்பு, பூசைக்கு உதவுதல் போன்ற கடமைகளைச் செய்யக்கூடிய தகுதியுடையவராகவும் திடகாத்திரமானவராகவும், நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபையால் நிர்வகிக்கப்படும்

I. தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்.
II. தும்பளை முத்துமாரி அம்மன் கோயில்
III. தும்பளை முருகன் கோயில்

ஆகிய மூன்று கோயில்களில் எதிலும் பணியாற்றக்கூடியவர்களாகவும், மேற்படி ஒரு கோயிலின் அர்ச்சகர் பூசை செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அவருக்காகப் பதில் கடமை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். (கோயில் உதவியாளர் இதற்கு விதிவிலக்கு)

சம்பளம்:

தகுதி அடிப்படையில் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தேவையான தகுதியும், பொருத்தமுடைய விண்ணப்பதாரிகள் சொந்தக் கையெழுத்தில் பூரண விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பத்தினை தயாரித்து இரு நற் சான்றிதழ்களுடன் பின்வரும் முகவரிக்கு 15 - 08 - 1997-க்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

**ஆறுமுகம் கார்த்திகேசு,**
**செயலாளர், து.நெ.அ.கோ.த.ப.சபை,**
**தும்பளை, பருத்தித்துறை.**

குறிப்பு:

தற்போதைய அர்ச்சகர்களும் மீள நியமனம் பெற விரும்பினால் மேற்கண்டவாறு விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| சி. சாம்பசிவம், | சி. தங்கவடிவேலு, | ஆ. கார்த்திகேசு, |
| தலைவர். | பொருளாளர், | செயலாளர். |

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்,
தருமபரிபாலன சபை, பருத்தித்துறை. (சி/1260)

## ஆஸ்பத்திரிக்கு தளபாடங்கள்

திருநெல்வேலி, ஓக. 5

யாழ். மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அரசினர் வைத்திய சாலைகளுக்கும், சுகாதார அலுவலகங்களுக்கும் தேவையான மரத்தளபாடங்கள் பெறப்படவுள்ளன.

கோப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, மருதங்கேணி, நெடுந்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு பிரதேச செயலர்களினால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-135)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 5

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருட காலம் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு பழைய மாணவர் சங்கம் தங்கப் பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்தது.

இதற்கான விழா கடந்த 19 ஆம் திகதி கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் வெள்ளி விழாக் கண்ட ரி. ஆனந்தரட்ணம், செல்வி எஸ். செல்லத்துரை, திருமதி எஸ். பாலசிங்கம், திருமதி என். பாலசிங்கம் ஆகியோருக்கே தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

விழாவில் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசனும் கலந்து கொண்டார். (இ-15)

## சன்சமூக நிலைய விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 5

காரைநகர் பெரியமணல் சிவகௌரி சன சமூக நிலையத்தால் வருடாந்த விளையாட்டுப்போட்டி சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிகளுக்கு ஈ. பி. டி. பி. தீவக துணை அரசியல் பொறுப்பாளர் ந. லோகன், காரைநகர் கடற்படை உதவி லெப்டினன்ட் மொஹொட்டி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றினர்.

மக்கள் குழுத்தலைவர் ஆ. சிற்றம்பலம், காரைநகர் வடக்கு அ.த.க பாடசாலை அதிபர் திருமதி பொ. நாகரத்தினம், காரைநகர் வடக்கு கிராம அலுவலர் இ. திருப்புகலூர் சிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றினர். (இ-3)

# மெதடிஸ்த திருச்சபை முதியோர் இல்லம், புத்தூர்.

மேற்படி இல்லத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சில வெற்றிடங்கள் உள்ளன.

விண்ணப்பிப்போர் கீழ்க்காணும் முகவரிக்கு 31 - 08 - 97 - க்கு முன் விண்ணப்பங்களை உங்களை அறிமுகப்படுத்தக்கூடிய இருவருடைய விலாசத்துடன் அனுப்பி வைக்கவும்.

**THE DIRECTOR,**
**METHODIST ELDERS HOME,**
**PUTTUR.**

முகாமைக் குரு,
மெதடிஸ்த திருச்சபை.

(சி/1259)

# முளாய் ஸ்ரீ சித்தி விநாயகர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேர்த் திருப்பணிச் சபையின் ஒரு முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்,

மேற்படி இரு ஆலயங்களின் தேவைக்காக ஒரு சித்திரத் தேரை உருவாக்க வேண்டும் என்ற தெய்வ கைங்கரியத்தை மனதிற் கொண்டு மேற்படி இரு ஆலயங்களின் பக்தர்களினதும் மூளாய் வாசிகளினதும் சம்பூரண ஆதரவுடன் மேற்படி இரு ஆலயங்களின் உபயகாரர்களால் 1979 ஆம் ஆண்டு ஒரு தேர்த் திருப்பணிச் சபையை உருவாக்கி இந்த தேர்த்திருப்பணிச் சபையின் அயராத உழைப்பினாலும் விடா முயற்சியினாலும் மேற்படி இரு ஆலயங்களின் அடியார்களாலும் உள்ளூர் வெளியூர்களிலுள்ள நலன் விரும்பிகளினாலும் மனமுவந்து வாரி வழங்கிய நிதி, பொருள் உதவியினாலும் ஒரு சிறந்த சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு அன்று முதல் இரு ஆலயங்களின் பாவனையில் இருந்து வருகிறது.

தற்போது இந்தச் சித்திரத் தேருக்கு நிரந்தர இருப்பிடம் ஒன்றும், தேர் முட்டி ஒன்றும் சிறப்புப் பொலிவுடன் அமைக்க மேலே குறிப்பிட்ட தேர்த் திருப்பணிச் சபை ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக இரு ஆலய அடியார்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து நன்கொடையைப் பெற ஒரு துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டிருந்ததை இரு ஆலய அடியார்களும், உள்ளூர் வெளியூர் நலன் விரும்பிகளும் நன்கு அறிவர். அத்துண்டுப் பிரசுரத்தில் நன்கொடை கொடுக்க விரும்புபவர்கள் திருப்பணிச் சபையின் பொருளாளரான டச்சு வீதி, மூளாயைச் சேர்ந்த திரு. கந்தசாமி குமாரசாமி அவர்களிடமோ அல்லது மேற்படி தேர்த் திருப்பணிச் சபையின் வங்கிக் கணக்கான யாழ்ப்பாணம், கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையின் 51620 இலக்கம் கொண்ட நடைமுறைக் கணக்கிலும் இடலாம் என்றும் வேண்டப்பட்டது.

இந்த வேண்டுகோளின் பின்னர், 20-07-97 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் "மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை" என்ற பெயரில் மேற்படி சித்திரத் தேர் தரிப்பிடத்திற்கும் தேர் முட்டிக்கும் நிதி உதவி கோரி விளம்பரம் ஒன்றை, பொது மக்களை தவறாக இட்டுச் சென்று குழப்பியடிக்கும் துர் நோக்கத்துடன் பிரசுரித்துள்ளார்கள்.

மேற்படி இரு ஆலயங்களின் தேர்த் திருப்பணிக்காக அமைக்கப்பட்ட தேர்த் திருப்பணிச் சபைக்கும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை என்று கூறிக் கொள்வோருக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| இ. த. விக்னராசா, | சண். கந்தையா, |
| தலைவர். | செயலாளர். |

**தேர்த்திருப்பணிச் சபை,**
**மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர்,**
**ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில்.**

மூளாய், சுழிபுரம். (48802)

# கண்ணீர் அஞ்சலி

## சிற்றம்பலம் சந்திரன்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

26-07-97 இல் சிற்றம்பலம் சந்திரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**வலி. மேற்கு பிரதேசசெயலர் பணிமனை**
**அலுவலர்கள் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், சங்கானை.**

சி/1261)

உ

# நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா
### 06 - 08 - 1997 புதன்கிழமை



காலை 9.00 மணிக்கு திரவிய அபிஷேகங்கள், கும்பங்கள் வீதியுலா, நவோத்தர சகஸ்ர மஹா (1008 சங்குகள்) சங்காபிஷேகம், விஷேட பூஜை, பூரகர்மா (ருது சாந்தி) திருமுறைப் பாராயணம், திருவூஞ்சல், புஸ்பாஞ்சலி அதனைத் தொடர்ந்து அம்பாள் அழகிய "தாமரைப்பூ வாகனத்தில்" வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அடியார்களுக்கு அருட் பிரசாதமும், கல்யாண மண்டபத்தில் அன்னதானமும் (மகேஸ்வர பூஜை) நடைபெறும்.

விசேட பேருந்து சேவையும் பயணப் படகுச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அடியார்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்.

ஆடிப்பூரத் திருவிழா உபயகாரர்கள்

(48796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் உணவுப் பொருளை இரவல் வாங்கும் நிலையில் மக்கள்!

## பணப் புழக்கம் இல்லாமற்போய்விட்டது

வவுனியா, ஓக. 5

வன்னியில் பலரிடம் பணம் இல்லை. இதனால் உணவுப் பொருள்களை இரவல் வாங்கும் வழக்கம் அங்கு உருவாகி வருகிறது.

வன்னிப்பகுதிக்கு சென்று திரும்பிய வவுனியா அரசாங்க அதிபரைப் பேட்டி கண்ட வவுனியாவில் உள்ள பி. பி. ஸி செய்தியாளர் மாணிக்கவாசகம் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னிப்பகுதி ஒரு விவசாயப் பிரதேசம். அங்கு பெரிய வீடுகள் கிடையாது. நகரப்பாங்கான இடங்கள் இல்லை. இதனால் தங்குமிடத்தைத் தேடிக்கொள்வதில் அப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்கள் அங்குமிங்கும் தொடர்ந்து அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சர்வதேச தொண்டர் நிறுவனங்களான அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவை சர்வதேசக்குழு போன்றவையும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களும் ஓரளவு உதவியை வழங்கிய போதும் அவர்கள் சென்று தங்கியிருப்பதற்குரிய கூடாரங்கள் ஒரு பிரச்சினையாகவே இருக்கின்றன.

அத்துடன், அங்கு உணவுப்பொருள்கள் இருந்தபோதிலும், அந்த உணவுப் பொருள்களை வாங்குவதற்குரிய பணம் இல்லை.

மக்கள் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றபடியால், அவர்களுடைய வாழ்க்கை முற்றாக சீர்குலைந்துள்ளது; அவர்களுக்கு எந்தவிதமான தொழிலும் இல்லை; வருமானம் இல்லை; இதனால் அவர்களுடைய கையில் பணப்புழக்கம் இல்லை.

இந்த நிலைமையில் வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்ட உணவுப்பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தபோதும், அவற்றை வாங்குவதற்குரிய பணம் அவர்களிடம் கிடையாது. அத்துடன் யுத்த நிலைமை காரணமாக தனியார் கடைகளில் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் அங்கு மக்கள் அரைவயிற்றுடன் வாழும் நிலைமையே உள்ளது.

அதுமட்டுமல்லாமல் பொருள்களை இரவல் வாங்குவதுபோல, அங்குள்ள மக்கள் உணவுப் பொருள்களை இரவல் வாங்குகின்றனர்.

இதனால் அங்கு உண்மையிலேயே மக்கள் இரந்து உண்ணும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-5)

# புலிகளுடன் பேசமுன் எதிர்கட்சியை அரசு கலந்தாலோசிக்க வேண்டும்

## 'இந்து' பத்திரிகைக்கு ரணில் பேட்டி

கொழும்பு, ஓக. 5

"புலிகளுடன் புதிதாக பேச்சு நடத்துவதாக இருந்தால் அரசாங்கம் அத்தகைய பேச்சுவார்த்தையின் விவரங்கள் குறித்து எதிர்க்கட்சியுடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆனால், புலிகளுடனான பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரை, அதை தொடக்குவதா இல்லையா என்பதைத்தீர்மானிப்பதுவும் அவ்வாறான தீர்மானம்மேற்கொள்ளப்படுமிடத்து பேச்சுவார்த்தையை எப்போது தொடங்குவது என்று முடிவெடுப்பதுவும் அரசைப் பொறுத்ததே"

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்ரணில்விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு சென்னையில் இருந்து வெளியாகும்'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1980 களின் பிற்பகுதியில் நிலவிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ஒரு வழிவகையாகவே இந்திய—இலங்கை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இப்பேட்டியில் ரணில் தெரிவித்தார்.

ஆனால் உடன்படிக்கைக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படையினருக்கு மிடையே நிகழ்ந்த யுத்தம் பற்றி அவர் எதையும் கூறவில்லை.

இலங்கையின், இன்றைய சூழ்நிலையில் இந்தியா ஏதாவது வகையில் பாத்திரத்தை வகிக்கும் சாத்தியம் உள்ளதா என்று கேட்கப்பட்ட போது "இந்தியா பொருத்தமற்றது என எவரும் கூறுவர் என்று நான் நினைக்கவில்லை" என்று பதிலளித்தாராம் ரணில். (இ-5)

## பிரதி அமைச்சரின் கணவர் விவாகரத்துக் கோருகிறார்

கொழும்பு, ஓக. 5

தனது மனைவியான சுகாதார மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் பவுத்திராதேவி வன்னி ஆராய்ச்சியிடமிருந்து அவரது கணவன் விவாகரத்துக் கோரியுள்ளார்.

விவாகரத்து தொடர்பான மனுவை அவரது கணவரான சட்டத்தரணி ஹேமந்த தயா பிடிதுவ கமகே தனது சட்டத்தரணி மூலம் கல்கிசை நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். (இ-10)

## 1,224 தாதியரை நியமிக்க நடவடிக்கை

### 8 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஓக. 5

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் வெற்றிடங்களை நரப்புவதற்குப் புதிதாக ஆயிரத்து 224 தாதிமார்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை சுகாதார அமைச்சு நடத்தவுள்ளது.

தற்போது அரச மருத்துவ மனைகளில் தாதிமார் பற்றாக்குறை நிலவுவதாகவும் —

அதனை நிவர்த்தி செய்யவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் — சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

1996 ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளை எடுத்த விண்ணப்பதாரர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தாதிமார்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 8 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரை சுகாதார, சுதேச வைத்திய அமைச்சில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் தமிழ் விண்ணப்பதாரர்களுக்கு மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள தாதிகள் பயிற்சி நிலையங்களில் தமிழ் மொழி மூலம் பயிற்சி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## 2 தடவைகள் பாம்பினால் கடியுண்டவர்

ஒரு மாதத்தில் இரு தடவைகள் இளைஞர் ஒருவர் பாம்பினால் கடியுண்ட சம்பவம் சாவகச்சேரி சிவன் கோயிலடியில் இடம் பெற்றது.

கடந்த மாதம் 6 ஆம் திகதி தேங்காய் பிடுங்கிய போது மரத்திலிருந்த பாம்பு கடித்ததால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பிய அவர் கடந்த புதன்கிழமை விறகு எடுக்கச் சென்ற போதும் பாம்பினால் கடியுண்டார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பாலச்சந்திரன் பிரபாகரன் (வயது 17) என்னும் இந்த இளைஞன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டார். (இ-117)

## நியமனம்

நவாலி, ஓக. 5

நல்லூர் பிரதேச செயலராக பணியாற்றிய திருமதி க. சிவசிதம்பரம் வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்கள பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-100)

## ஓய்வு பெற்றார்

திருநெல்வேலி, ஓக. 5

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் தமது 60 வயதில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். (இ-135)

# செய்திச் சாரம்

## வேலணை ப.நோ.கூ. சங்க தலைவர்

நெடுந்தீவு, ஓக. 5

வேலணை பல நோ. கூ. சங்கத்தின் தலைவராக செ. சிவலோகநாதனும், இயக்குநர் சபை உறுப்பினர்களாக தி. இராசேஸ்வரன், கோ. சுப்பிரமணியம் ஆகியோரும் உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-111)

## வைத்தியஅதிகாரி பணிமனை

யாழ்ப்பாணம், ஓக. 5

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை, மாவட்ட வைத்திய அதிகாரியின் பணிமனை திருத்தியமைக்கப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (இ-15)

## சூடுபட்டவர் மரணமானார்

இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தலையில் பலத்த காயத்துடன், ஆபத்தான நிலையில் கடந்த 18 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் கடந்த முதலாம் திகதி அங்கு மரணமானார்.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த துரையப்பா அரசரட்ணம் (வயது-58) என்பவரே மரணமானவர் ஆவார். (இ-15)

## சித்தி பெற்றார்

தென்மராட்சி, ஓக. 5

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைகள் வகுப்பு II தரம் II க்கான போட்டிப் பரீட்சையில் சாவகச்சேரி நகரசபை செயலாளர் சின்னப்பு நடராசா திறமை அடிப்படையில் சித்தி பெற்றுள்ளார். (இ-117)

## குற்றப்பத்திரிகை சிங்களத்தில்

கொழும்பு, ஓக. 5

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை சிங்கள மொழியில் உள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## இஞ்சி தட்டுப்பாடு

தென்மராட்சி, ஓக. 5

குடாநாட்டில் இஞ்சிக் கிழங்குக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ117)

## குடி தண்ணீர் இன்றி சிரமம்

நல்லூர், ஓக. 5

புத்தூர் வாதரவத்தை, விரவாணி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குடி தண்ணீர் பெற பெரிதும் கஷ்டம் அடைகின்றனர்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக நிலத்தடி நீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளதாகவும் —

தாம் மீளக்குடியமர்ந்து ஒரு வருடங்களுக்கு மேலாகியும் சேதமடைந்த குழாய்கள் திருத்தப்படவில்லை என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மைல் தூரம் சென்றே குடிதண்ணீர் பெற வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-103)

## மண்வெட்டி விநியோகம் இல்லை

வலிகாமம் தெற்கு, ஓக. 5

கமநல கேந்திர நிலையங்களுக்கூடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட இருந்த மண்வெட்டி விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கமநல கேந்திர நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-152)

## பல் வைத்தியர் இல்லை

வலிகாமம் தெற்கு, ஓக. 5

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை பற்சிகிச்சைப் பிரிவுக்கு பல் வைத்தியர் இல்லாததால் பல் நோயாளர்கள் பலவித இடையூறுகளையும் தாண்டி சங்கானை அரசினர் வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் செல்கின்றனர். (இ-152)

## கால்நடைகளால் பயிர்கள் அழிவு

தென்மராட்சி, ஓக. 5

சாவகச்சேரி நகரப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகள் வேலிகள் அப்புறப்படுத்தப்பட்ட வளவுகளுக்குள் உள்ள பயிர்களை அழித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

## கைதானோர் பாதுகாவலர் சங்கம் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 5

வடபகுதியில் கைதானோர், தடுத்து வைக்கப்பட்டோர் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை 11.00மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது. (இ-3)

## குழாய்க் கிணறு

திருநெல்வேலி, ஓக. 5

கோண்டாவில் புதுக் கோட்டை என்னுமிடத்தில் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் நிதிஉதவியுடன் குழாய்க் கிணறு ஒன்று நிறுவப்படவுள்ளது. இக் குழாய்க்கிணறு அமைக்கும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-135)

## முல்லையடியில் கோழிக் குஞ்சுகள்

பளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 12 குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் இலவசமாக அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கால்நடை வளர்போர்ப் சங்கத்தினால் வளர்க்கப்பட்ட இக் கோழிக் குஞ்சுகள் பளைப் பிரதேச செயலகத்தின் இவ்வருடத்திற்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் பெறப்பட்டது. (இ-117)

## பிரிவுபசாரவிழா

தென்மராட்சி, ஓகஸ்ட் 5

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் உப அலுவலக பொறுப்பதிகாரி இ. கனகசிங்கம், கச்சாய் ஆயுள்வேத வைத்தியர் பொ. சு. இராசரத்தினம் ஆகியோர் இளைப்பாறிச் செல்வதையிட்டு உப அலுவலக ஊழியர்களால் பிரிவுபசார விழா அலுவலக மண்டபத்தில் நடத்தப்பட்டது.

விழாவில் பிரதேச சபை செயலாளர் ஐ. வைரமுத்து, கைதடி உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஐ. சிவராசா உட்பட பலர் உரையாற்றினர். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

சங்கானை மீன் சந்தைக்கு அருகாமையிலுள்ள அமரர் நா. செல்லையாவின் தேவி மரம் அரிவு தொழிற் சாலையிலுள்ள, றோதை வாளும் பட்டடையும், தகரக் கொட்டகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகர்பாலசிங்கம் (மணியம்). சங்கானை மேற்கு, மாரிய வத்தை. [48633]

சகல போட்டித் தேர்வுகளுக்கும் வழிகாட்டும் பொது அறிவுக் களஞ்சியம் மனோரமா இயர்புக் - 1997 விற்பனையாகிறது, பூபாலசிங்கம் புத்தகசாலை, இல 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி - 1237)

### தவறிவிட்டது

கடந்த சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சையின் போது S. விஸ்வலிங்கம் ஆகிய எனது மூக்குக் கண்ணாடி ஒன்று தவறுதலாக வேறொருவரின் கம்பஸ் பாக்குக்குள் வைக்கப்பட்டு விட்டது. இதனை, வேம்படி மகளிர் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்தால் பேருதவியாக இருக்கும். (48786)

விநாயகமூர்த்தி சதீஸ்குமார் என்பவரது 793611501V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன நாச்சிமார் கோயிலுக்கும், முருகமூர்த்தி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 306, K K S வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.
(48783)

பல்கலைக்கழக வளாகத்துக்கும், சுன்னாகம் இலங்கை வங்கிக்கிளைக்கும் இடையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். முகவரி: சிறிவிஜயா, இலங்கை வங்கி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(48794)

கனகரட்ணம் ஞானேந்திரன் என்பவரது டென்மார்க், பாஸ்போட்டும், பாஸ்சும் நெல்லியடி மத்திய சந்தையினுள் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து துவாலை, அல்வாய் கிழக்கு எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(48798)

### பசுமாடு விற்பனைக்கு

10 நாள் கன்று ஈன்று 21 போத்தல் பால் கறக்கும் மாடு, கினிக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. S. K Farm, பொன்னாலைவீதி, விதானை வளவு மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக)
(48799)


## ரெலிக்கொம் ஒப்பந்தம்

கொழும்பு, ஓக. 5

''ரெலிக்கொம்'' நிறுவனத்தின் 30 சத வீதப் பங்குகளை ஜப்பானிய நிறுவனமான நிப்பொன் நிறுவனம் வாங்கும் ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படவிருக்கிறது.

இந்தநிறுவனத்தின் 3.5 சத வீதப் பங்குகள் நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்றும்—

எந்த ஊழியரும் வேலையில் இருந்து நீக்கப்படமாட்டார்கள் என்றும்—

ஊழியர்களுக்கு ஓய்வூதிய வசதி தொடர்ந்தும் இருக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)


## சுகாதார திணைக்களம் மருந்து விற்பனை அறிவித்தல்

ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், ஔடதங்கள் அதிகாரசபையிடமிருந்து உரிமம் பெறாது ஆங்கில மருந்து விற்பனை செய்யும் வர்த்தகர்கள் 1997 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எமது பணிமனைக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி திகதிக்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் அத்திகதிக்குப் பின்னர் மருந்து வியாபாரத்தில் ஈடுபடமாட்டார்கள் எனக் கருதப் படுவார்கள்.

மேலதிக விவரங்கட்கு எமது பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

வைத்தியகலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-1239)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் மலர்வு:
1970—01—07

வன்பில் உதிர்வு:
1996—08—15

### பொன்னையா ஸ்ரீவல்லி

திதி: துதியை 1997—08 05

அழகின் உருவான அன்பின் ஒளியான எமது அருமை உறவே ஸ்ரீ! நீர் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறையடி சேர்ந்து இன்றுடன் ஒரு வருடம் நிறைவானது. உம்மை நினைந்து வருந்தாத நாள் சூரியன் உதிக்காத நாளேயாம். நாமிருக்கும் வரை உம்மை மறவோம்.

உமது பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

பொன்னாலை.

(48708)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் இ. குணசிங்கம்

(B. A. Dip - in - Ed )

மலர்வு:
10—02—1952

மறைவு:
19—07—1996

திதி: 05 — 08 — 1997

அறிவறிந்த நாள் முதலாய் - எம்மை
ஆசையாய் அணைத்து நின்று
அன்பு மழை பொழிந்து விட்ட - எங்கள்
அருமை அப்பா போனதெங்கே?

குணத்தில் குன்றாகி - எம்மை
குறைகள் இன்றி வளர்த்தவரே
காலமெல்லாம் வாழ்ந்தவரே - எம்மை
கலங்க விட்டுப் போனதெங்கே?

கிழவி தோட்டம், - குடும்பத்தினர்
கரவெட்டி கிழக்கு. (48677)

## வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் 1997

உ

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 08 - 08 - 97 | வெள்ளி காலை 10 மணி |
| தேர்: | 17 - 08 - 97 | ஞாயிறு காலை 9 மணி |
| தீர்த்தம்: | 18 - 08 - 97 | திங்கள் காலை 9 மணி |
| பூங்காவனம்: | 19 - 08 - 97 | செவ்வாய் மாலை 3 மணி |

மாலை திருவிழாக்கள் பி. ப. 5 மணிக்கு நிறைவுறும்.

தலைவர்,
ஆலய பரிபாலன சபை.

(48792)

## நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் சைவமகாசபை

உ

மேற்படி ஆலயத்தில் 06-08-1997 ஆந் திகதி புதன்கிழமை ஆடிப்பூரத்தன்று காலை 6-00 மணிக்கு பிராயச்சித்த அபிசேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு நித்திய பூசை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

(48793) - ஆலய பரிபாலன சபையினர்

## வட இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

மாகாண மட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டு குழுவினரைக் கௌரவிக்கும் விழாவில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள், பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் திருமதி ஜே. கணேசரத்தினத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பழைய மாணவிகள் சங்கம்.

வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை. (சி/ 1258)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 06 - 08 - 97 புதன்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருந்த ''நல்லைக்குமரன் மலர் 97'' வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களினால் 15 - 08 - 97 வெள்ளிக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதோடு, இதனால் அனைவருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துகின்றோம்.

தலைவர்,
சைவசமய விவகாரக் குழு,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997 - 08 - 01 (கி/1250)

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

ஊரெழு
**ஸ்ரீ பால முருகன் ஆலய நிர்வாகசபை**

நடத்திய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு 03 - 08 - 97 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

பரிசுக்குரிய இலக்கங்கள்

1 ஆவது 1909
2 ஆவது 875
3 ஆவது 1433

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 2825 | 1070 | | 639 |
| 459 | 1898 | 271 | 2189 |
| 2447 | 777 | ஆகியவை ஆகும். | |

அத்துடன் திரு. குமாரசுவாமி அவர்களின் சைவ சொற்பொழிவுடன் வைபவம் நிறைவு பெற்றது.

செயலாளர்,
ஆலய நிர்வாகசபை

ஊரெழு ஸ்ரீ பாலமுருகன். (48795)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிணக்குத் தீவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் உள்ள கச்சதீவு மீண்டும் பிரச்சினைக்குரிய இடமாக மாறியுள்ளது. நெடுந்தீவுக்குத் தெற்கே தமிழகக் கடற்கரையில் இருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள இந்தத் தீவு எழுபதுகளுக்கு முன்னரும் இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் பிரச்சினையை உருவாக்கி இருந்தது.

இலங்கை மீனவர்களும் தமிழக மீனவர்களும் இந்தத் தீவைப் பயன் படுத்தி வந்ததால் பல பிரச்சினைகளும் சச்சரவுகளும் தலை தூக்கியிருந்தன. இரு சாராருக்கும் இடையில் தொழில் சம்பந்தமான தகராறுகள் ஒரு புறமிருக்க, இலங்கை அரசு இத்தீவினை ஒரு கள்ளக் கடத்தல் நிலையமாகவே பார்த்து வந்தது.

அதனால் அப்போதும் கச்சதீவு இருநாடுகளுக்கும் இடையில் பெரும் பிணக்கைத் தோற்றுவித்தது. கச்சதீவு தத்தமக்கே சொந்தம் என்று இரண்டு நாடுகளும் ''குடுமிச் சண்டை'' போடும் அளவுக்கு விவகாரம் முற்றியது.

எனினும் நிலைமை மோசமடைவதற்கு முன்னர் இரண்டு நாட்டு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி இணக்க நிலைக்கு வந்து உடன்பாடு ஒன்றைச் செய்தனர்,

அதன் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு உரியது என்றும், இந்திய மீனவர்கள் அங்கு தரித்து நின்று தொழில் செய்வதற்கு உரித்துடையவர்கள் எனவும் இணங்கப்பட்டது.

தமிழக மீனவர்களின் நலனைக் கருத்திற் கொள்ளாமல், கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்துவிட்டதாக மத்திய அரசு மீது அப்போதே கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர்—

தமிழகமீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கும் வேகமும் வீச்சும் அதிகரிக்கும் போதெல்லாம் கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்குச் சொந்தமாக்கவேண்டும் என்ற குரல் அடிக்கடி எழுந்தது.

கடந்த சில மாதங்களில் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலால் இறக்கும் தமிழக மீனவர்களின் எண்ணிக்கை 'றொக்கெட்' வேகத்தில் அதிகரித்து வந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அதன் விளைவாக, தமிழகத்தில் கச்சதீவு மீட்புரிமை மாநாடு நடத்தும் அளவுக்கும், கச்சதீவுக்கு உரிமை கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் அளவுக்கும் நிலைமை மிக மோசமடைந்திருக்கிறது.

தமிழகத்தில் நெருக்கடியைத் தரும் விதத்தில் இலங்கை எதிர்ப்பு அணி உருவெடுத்து வருகிறது. எதிர்வரும் ஒக்ரோபரில் கச்சதீவு மீட்புக்கான ''தியாகப் பயணம்'' குறித்தும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவரை தனது கடற்படை தாக்குவதில்லை, கொல்லுவதில்லை என்ற நிலையை எடுத்துக்கொள்ள இலங்கை அரசு முயன்றுள்ளது.

ஆனால் அந்தளவு இலகுவாகக் கொள்ளக்கூடிய, தட்டிக் கழிக்கக்கூடிய, சமாளிக்கக்கூடிய விவகாரமாக கச்சதீவுப் பிரச்சினை இருக்காது என்றே தென்படுகிறது. மீண்டும் பிணக்குக்குரிய தீவாக அது மாறுகிறது!

# வேலையற்ற பட்டதாரிகள் மூலம் வெற்றிடங்களை நிரப்பக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 5

''யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளைக் கொண்டு யாழ். மாவட்ட திணைக்களங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்''

இவ்வாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினருடன் சங்கக் குழு நடத்திய கலந்துரையாடலிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

★ பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும்போது பயிலுநர் என்ற அடிப்படையில் அல்லாமல் நிரந்தர நியமனமாக வழங்கப்படல் வேண்டும்;

★ பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்று நிரந்தரமாக்கப்படாதவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

★ வழங்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனங்களில் பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

★ யாழ். மாவட்ட பட்டதாரிகள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார பாதிகாப்பு தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் தெளிவுபடுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(இ-3)

## மீளக்குடியமர பதிவு செய்தோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக. 5

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர ஏற்கனவே பதிவு செய்தவர்கள் இதுவரை நிரந்தரமாக மீளக்குடியமராது விட்டால் திங்கள், புதன், சனி ஆகிய நாள்களில் மட்டும் மல்லாகத்தில் உள்ள சிவில் நிர்வாக அலுவகத்தில் கிராம அலுவலர்களிடம் பதிவு செய்து மீளக் குடியமரலாம் என்று வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. வை. திலகநாயகம் கேட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் அப்பகுதியில் மக்கள் குடியமர்த்தப்பட்டுவந்தனர்.

(இ-3)

## ஆதீனத்தில் யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வாரத்தில் வெள்ளி சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

காலை 6 மணி முதல் 7 மணி வரையும், மாலை 5 மணி முதல் 6 மணிவரையும் நடைபெற்று வரும் இவ்வகுப்புகளில் ஆண்களும், பெண்களும் பங்குபற்றலாம்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## செயலகத்தில் நூலகம்

யாழ். செயலக நலன்புரிச் சங்கம் செயலக ஊழியர்களின் நன்மை கருதி நூல் நிலையமொன்றினை ஆரம்பித்துள்ளது.

இந் நூல் நிலையம் செயலகமேல் மாடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-100)

## பிரதேச செயலகங்களிலும் மோட்டார் திணைக்கள பணிகள்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ். மோட்டார் வாகனத் திணைக்களத்தால் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த சில பணிகளை இனிமேல் பிரதேச செயலகங்கள் மேற்கொள்ளும்.

கடந்த மாதம் 31ஆம்திகதி யாழ் செயலகத்தில் நடைபெற்ற பிரதேச செயலர்களுக்கான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி யாழ். மாவட்ட மோட்டார்த் திணைக்களத்தில் தற்போது நடைமுறையில் உள்ள புதிய மோட்டார் சைக்கிள் பதிவு, புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், சாரதி அனுமதிப்பத்திர அட்டையின் செயலளவை விஸ்தரித்தல் ஆகிய மூன்று பணிகளும் தொடர்ந்தும் மோட்டார்த் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படும் என்றும் —

வருடாந்த வாகன வரி அறவிடுதல், வாகன உடைமை மாற்றம், சாரதி அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாக சாரதி அனுமதி அட்டை வழங்குதல், சாரதி அனுமதி அட்டையின் இரட்டைப் பதிவு வழங்கல், பதிவுப்புத்தக நகல் வழங்கல் இவற்றுக்கான கட்டணங்களை அறவிடுதல், இவற்றை உரிய நடைமுறைக்காக கொழும்பு மோட்டார் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல் ஆகிய பணிகள் பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் — யாழ். மோட்டார் வாகனத்திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

## 6 சடலங்கள் மீட்பு

பொலநறுவமாவட்டத்தில் மெதிரிகிரிய காட்டுப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற 6 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இச்சம்பவத்தில் இவர்களுடன் கூடச் சென்ற நால்வர் காணாமற் போயுள்ளனர்.

(ஐ-21-3)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 5

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வருடாந்த அம்பாள் தேர் உற்சவம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

நாயன்மார்கட்டு இராசேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். நாளை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

யாழ். கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்பாள் ஆலய இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(இ-4)

★ ★ ★

ஏழாலை வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் ஏகாதசதின இலக்ஷார்ச்சனை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்.

இலக்ஷார்ச்சனை பூர்த்தி தினத்தில் 1008 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருதலும் அன்னதான வைபவமும் இடம்பெறும்.

★ ★ ★

அரியாலை - பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறுகிறது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், காலை 9-00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

(இ-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை கன்னலிங்கேஸ்வர கன்னகாம்பிகை சமேத கன்னகை அம்மன் கோயில் ஆடிப்பூர உற்சவம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

(ஐ-15)

பரீட்சைத் திணைக்களத்தில் நிலவும் தாமதத்தால்

# 50ஆயிரம் ஊழியர்களின் நிரந்தர நியமனம் தாமதம்!

கொழும்பு, ஓக. 5

பலஆண்டுகளாக அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனங்களில் நியமனம் பெற்ற சுமார் 50ஆயிரம் ஊழியர்கள் இதுவரை அவர்களது சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களத்தில், பெறுபேற்றுச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் பிரிவில் நிலவும் தாமதம் காரணமாகவே இவ்வளவு பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக சேவையில் சேர்க்கப்படுபவர்களின் கல்விப் பெறுபேறுகளை உறுதிப்படுத்துமாறு பல்வேறு திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் இதுவரை சுமார் 75 ஆயிரம் சான்றிதழ்களைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளன,

பரீட்சைத் திணைக்களத்தில் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் பிரிவில் போதிய அதிகாரிகளும் எழுதுநர்களும் இல்லாமையே இந்தத் தாமதத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழகம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபம்- 2 இல் நடைபெறும்.

''ஹொங் கொங்கின் எதிர்காலம்'' என்னும் தலைப்பில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை இக்கருத்தரங்கில் உரையாற்றுவார்.

(ஐ)

## நாளை

**ஆடி 21**

புதன்கிழமை

திதி: திருதியை முன்னிரவு 7.44 வரை.

நட்சத்திரம்: பூரம் முன்னிரவு 9.04 வரை.

ஆடிப்பூரம்

சுபநேரம்: 4.34 - 6.04

ராகுகாலம்: 12.04 - 1.34

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

விமான விபத்துக்கள் பற்றிய

# விசாரணை அறிக்கை குப்பைக் கூடைக்குள்!

கொழும்பு, ஓக. 5

கடந்த இரண்டு ஆண்டுகளில் விமானப் படைக்குச் சொந்தமான போக்குவரத்துமற்றும் தாக்குதல் விமானங்கள் வீழ்ந்து நொருங்கிய சம்பங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுக்களின் அறிக்கைகள் குறித்து விமானப்படைத் தலைமைப் பீடமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ இதுவரை எதுவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரியவருகிறது.

விமானப்படைக்கு தேவையான கொள்வனவுகளை மேற்கொண்ட போது தமது வீடுகளுக்குத் தேவையான மரங்களைக் கொள்வனவு செய்தது—

வடபகுதியில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினருக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட செம்மறி ஆட்டு இறைச்சியை உயர் அதிகாரியின் வீட்டில் நடைபெற்ற விருந்துக்குப் பயன்படுத்தியது— போன்ற ஊழல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற 14 விமான விபத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகள் குறித்தும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

விமானப்படைக்குள் நிலவக்கூடிய ஒழுங்கீனங்கள் மற்றும் கவனயீனங்கள் விமான விபத்துக்களுக்கு காரணமாக அமையலாம் என மேற்கூறப்பட்ட விசாரணை அறிக்கைகள் சிலவற்றில் குறிப்பிட்டுள்ளன என்று நம்பப்படுகிறது.

விமானப்படை உயர் அதிகாரிகளிடையே இடம்பெறும் உள்ளகப்போர்களும்—

இந்த ஊழல்களில் பல உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டு இருப்பதுமே— விசாரணைகள் குறித்து மேல் நடவடிக்கைகள் எடுக்காததற்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணறுகள் புனரமைக்கப்படும்

திருநெல்வேலி, ஓக. 5

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மக்களின் குடி தண்ணீர்த் தேவையை நிறைவேற்றும் பொருட்டு நான்கு பொதுக் கிணறுகள் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

திருநெல்வேலி, அரியாலை, கோண்டாவில், கந்தர்மடம் ஆகிய இடங்களிலுள்ள பொதுக் கிணறுகளே இவ்வாறு ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படவுள்ளன. (ஐ-135)


WANTED

A Medical Doctor to work For "Medecins sans Frontieres" Doctors without Borders fn Madhu.

This Doctor will see patients in the OPD, Be on call for emergencies and carry out General Hospital duties. Please contact:

MSF in Jaffna for Further Information On C. L. S. Bookshop Lane.

(48810)

விற்பனைக்கு

கர்Fபோம் பிறசியர்ஸ், சில்வர் சீல்ட் தயாரிப்புகள், சொக்ஸ் வகைகள், பெனியன், லேடிஸ் வெஸ்ட், போட்டோ அல்பம் இன்னும் பல மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

ஸ்ரீ முருகன்,
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (48814)


## தசாகாதி கிருஹயக்ரு அழைப்பு

அன்புடையீர்!

ஈசுர வருஷம் ஆடித் திங்கள் 10 ஆம் நாள் 26-7-97 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தந்தையார் கௌண்டின்னிய கோத்திரத்தில் பிறந்த

**கிருஸ்ண ஐயர் சுப்பிரமணிய ஐயர்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

04 08-97 திங்கட்கிழமை காலை 10 மணி தசாகம் நடைபெற்றது.
05-08-97 இன்று செவ்வாய்க்கிழமை ஏகோதிஸ்டம்
06 08-97 புதன்கிழமை மாசியம்
07-08-97 வியாழக்கிழமை சபிண்டீகரணம்
08-08-97 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிருஹயக்ஞம்

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அடைக்கலந் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை. (48809)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி வேலாயுதம்

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அன்னலட்சுமி வேலாயுதம் அவர்கள் 04-08-1997 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும், சொர்ணம்பாள், காலஞ்சென்ற சோமசுந்தரம் (இ. போ. ச.), காலஞ்சென்ற செல்வி செல்வநாயகி மற்றும் ராஜநாயகி, ஆனந்தராஜன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, புவனேந்திரா, செல்லத்துரை, டாக்டர் சிவபாலன் (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் மாமியாரும், சோணேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் மாணவன்), கேதீஸ்வரன், நகுலாம்பிகை, நகுலேஸ்வரன், அனுஜா, பவிதா, அனுசாந்தன், சோபனா, சுகன்ஜா, மாலதி (யாழ். அரச செயலகம்), புஸ்பகாந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று 04-08-97 திங்கட்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
Dr. சிவபாலன் (மருமகன்)
(ஆயுள்வேத வைத்தியர்)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (48815)

# வன்னி அபிவிருத்தி இணைப்புக் குழு நடவடிக்கைகளில் தலையீடு

## திட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 5

வன்னி அபிவிருத்தி இணைப்புக்குழுவின் நடவடிக்கைகளில் திட்ட அமுலாக்கல் அமைச்சு அதிகாரிகள் தேவையற்ற விதத்தில் தலையிடுவதால் அக்குழுவின் தலைமைப் பதவியை வகிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வன்னி அபிவிருத்தி இணைப்புக்குழு தலைவருமான த. சித்தார்த்தன் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அவசர அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு இணைப்புக்குழு அவற்றை அங்கீகரித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத அப்பகுதி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய பொறுப்பு எம். பிக்களுக்கு உள்ளது. அப்பகுதி மக்களுக்கு மிகக் குறைந்த வசதியாவது வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

பல வருடங்களாக இராணுவக் கட்டுப்பாடற்ற அந்த பகுதிகளுக்கு அரசு எந்தவித நிதியையும் வழங்கவில்லை. இதையடுத்தே எமது நிதியில் ஒரு பகுதியை அப்பகுதி மக்களுக்காக ஒதுக்கீடு செய்கின்றோம்.

அப்பகுதிக்கு நாங்கள் போக முடியாது என்பது உண்மை தான். அங்குள்ள மக்களின் பிரதிநிதிகள் தமது தேவைகளை எம்மிடம் கூறுகிறார்கள்.

கொழும்பு அதிகாரிகள் வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கே வருவதில்லை. கொழும்பில் இருந்து கொண்டு முடிவு எடுப்பது சரியல்ல.

நாம் எடுக்கும் தீர்மானங்களை அமுல் செய்ய முடியாத நிலையில் நாம் பதவி வகிப்பது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

திட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மாவட்ட அபிவிருத்தியில் தலையிடாமல் செய்ய வேண்டும்.

இப்படி அவர் கேட்டுள்ளார். (இ-3-21)

### நவீன...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினர் காயமடைந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தலைமைப் பீடத்தில் இருந்து வெளியான உளவுத் தகவல்கள் மூலம் இந்த இழப்புகள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

பலியானோரில் 49 பேர் இராணுவத்தினர், 66 பேர் பொலீஸார், 14 பேர் கடற்படையினர், 6 பேர் விமானப் படையினர் ஆவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் 40 எம். எம். கிரனேட் செலுத்திகள், 12. 7 விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகள், அவற்றுக்கான 320 ரவைகள், டாங்கி எதிர்ப்பு கிரனேட் செலுத்திகள்—ஐந்து, அதற்கான ஷெல்கள் — 75, 60 எம். எம். மோட்டார்கள் —2, அதற்குரிய ஷெல்கள் --465, நடுத்தர ரவைகள் —46 ஆயிரம் உட்பட பல இராணுவ தளபாடங்களைக் கைப்பற்றியதாகவும் "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்தது. (ஐ-164-3)

### காணாமற்போன ..

(முதலாம் பக்கத் தொடர்)

இனந்தெரியாத கப்பல் ஒன்றின் நடமாட்டம் தொடர்பாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அக்கப்பலைக் கண்காணிப்பதற்காகப் பலாலியில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் திடீரெனத் தொடர்பிழந்து காணாமற்போனது.

இந்த விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

### பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்)

தனைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்தனர்.

பேராதனை, கோட்டே ஜெயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் தத்தமது பல்கலைக்கழகங்களுக்கு எதிரே இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

சுலோக அட்டைகள் தாங்கியவாறு அவர்கள் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். (இ-3-21)

### ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாவட்ட ரீதியில் பிரசாரக் கூட்டங்களை நடத்த ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

இந்தப் பிரசாரக் கூட்டங்களை நடத்தும் திகதிகளை நிர்ணயிருக்கும் பணியில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், ஜனாதிபதி செயலக அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவிருப்பதால் அதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கையிலான பொலீஸார் தங்கள் உயிர்களைக் காப்பதற்காகக் காட்டுக்குள் தப்பி ஓடினர்.

இவ்வாறு காட்டுக்குள் ஓடிய பொலீஸாரில் 6 பேர் ஞாயிறன்று காட்டு வழியாக பாதுகாப்பு நிலைகளை நோக்கி வந்துகொண்டிருந்த போது அவர்களை விடுதலைப் புலிகள் என நினைத்த மற்றொரு பொலீஸ் குழு அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இச்சம்பவத்தில் இரு பொலீஸார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்களது உடல்கள் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு மரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுடன் காட்டு வழியாக வந்த ஏனைய 4 பொலீஸாருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதேபோல் இராணுவத்தைச் சேர்ந்த சிலரும் கடற்படையினரைச் சேர்ந்த சிலரும் உயிர் தப்ப காட்டுக்குள் ஓடியுள்ளனர். அவர்கள் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இரு சிப்பாய்கள் திங்கள் மாலை அவர்களது முகாமுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

ஓமந்தையில் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் பணியாற்றிய 186 பொலீஸார் அங்கிருந்து தப்பி வந்து தற்போது வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். தங்களால் ஓமந்தையில் பணியாற்ற முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்கொண்டதால் தங்களுக்கு 3 நாள்களாவது விடுமுறை வழங்குமாறு அந்தப் பொலீஸார் பிரதிப் பொலீஸ்மா அதிபரிடம் கோரிய போதிலும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் அதற்கு இணங்கவில்லை.

இதனால் தங்களது ஆயுதங்களை மூத்த அதிகாரி ஒருவரிடம் கையளித்துவிட்டு வேலையைக் கைவிட்டு தாங்கள் வீடுகளுக்குச் செல்லவுள்ளதாக அந்தப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பொலீஸ் உயர் அதிகாரிகளிடம் வினாவியபோது "இந்தப் பொலீஸாருக்கு தேவையான உதவிகளும் வசதிகளும் முடிந்தளவு விரைவாக வழங்கப்பட்டு அவர்கள் ஓமந்தைப்பகுதிக்கு சேவைக்கு அனுப்பப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இப்படி அவர் கூறினார். (இ-10)

### காரைநகர் மாணவருக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஓக. 5

இவ்வாண்டு நடைபெறும் ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தியடையும் காரைநகர்ப் பகுதி மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கிக் கௌரவிக்க காரைநகர் வாரி வளவு நல்லியக்கச் சபை தீர்மானித்துள்ளது.

அடுத்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று இவர்களுக்குப் பரிசில்வழங்கும் விழா நடைபெறும்.

1995, 1996 ஆம் ஆண்டுகளில் ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சையிலும், ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்த காரைநகர்ப் பகுதி மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

### ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்களும் எம். ஐ. 24 ரக ஹெலிகளும் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர். ஓமந்தையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி படையினர் ஆட்லறித் தாக்குதலும் நடத்தினர்.

ஓமந்தை பெரியமடு பகுதியில் தரித்து நிற்கும் 55 ஆவது படையணியும் நெடுங்கேணியில் தரித்து நிற்கும் 53 ஆவது படையணியும் புளியங்குளத்தில் இணையத் திட்டமிட்டிருப்பதால் படையினர் மீதான புலிகளின் தாக்குதல் அதிகரிக்கலாம் என செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (இ-10)

### ஆலயத்துக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் அத்தியட்சகர் சீசல் ரணவீர தலைமையிலான குழு மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் எல். ரத்தினாயக்கவின் மேற்பார்வையில் இக்கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்திவருகிறது. (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] யார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 05-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org